12 OCT 2015
EASTERN UNIVERSITY, SRI LANKA

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMEREC AND MANAGEMENT

## (EXTERNAL DEGREES)

### FIRST EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION/

### FIRST EXAMINATION IN BACHELOR OF ECONOMICS – 2010/2011

### [AUGUST, 2015]

### (PROPER/REPEAT)

## EXB/EXE 1092 – SOCIAL HARMONY AND SRI LANKAN STUDIES

எல்லா வினாக்களுக்கும் விடை தருக — நேரம்:இரண்டு மணித்தியாலம்

### PART I

**Q1.** பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) இலங்கையின் தற்போதைய சனத்தொகை என்ன?
2) இலங்கையின் மழைவீழ்ச்சிகூடிய பிரதேசம் யாது?
3) இலங்கையில் இல்மனைற் கனியவளம் காணப்படும் பிரதேசம் யாது?
4) 2014 ஆம் ஆண்டில் இலங்கையின் தலாவருமானம் (அண்ணளவாக) எவ்வளவு?
5) இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் யார்?
6) இலங்கையின் பிரதான மீன்பிடிப் பிரதேசங்கள் மூன்று தருக.
7) 'நல்லாட்சி' என்றால் நீர் புரிந்துகொள்வது யாது?
8) இலங்யையில் எந்த அரசியற்திட்டத்தில், சிறுபான்மை மக்களின் உரிமைக்கான காப்பீடு வழங்கப்பட்டுள்ளது?
9) இலங்கையின் தற்போதைய பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?
10) இலங்கையின் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மூன்று இடங்களைத் தருக.
11) இலங்கை சுதந்திரம் பெற்றபோது தேசாதிபதியாக இருந்தவர் யார்?
12) கண்டி இராசதானியின் கடைசி மன்னன் யார்?
13) பல்லினத்தன்மை என்றால் என்ன?
14) முரண்பாட்டு முகாமைத்துவம் என்றால் நீர் விளங்கிக்கொள்வது யாது?
15) 1956 ஆம் ஆண்டின் 'சிங்களம் மட்டும்' உத்தியோகபூர்வ மொழிச்சட்டம் எவ்வாறு இனங்களுக்கிடையிலான சமூக நல்லுறவைப் பாதித்தது?

**(15×04 = மொத்தம் 60 புள்ளிகள்)**

## PART II

**Q2.**

அ) "இலங்கையின் கிராமிய விவசாயத்துறை எதிர்நோக்கும் பிரதான பிரச்சனைகளைத் தருக. **(03 புள்ளிகள்)**

ஆ) சுதந்திரத்திற்குப்பின் அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நவடிக்கைகள் பெருந்தோட்ட ஏற்றுமதி விவசாயத்துறையிலேற்படுத்திய தாக்கங்களை விபரிக்குக. **(03 புள்ளிகள்)**

இ) யுத்தத்தின் பின்னரான இலங்கையில் உல்லாசப்பயணக்கைத்தொழிற்றுறை இலங்கையின் பொருளாதாரத்திலேற்படுத்திய தாக்கங்களை ஆராய்க. **(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**Q3.**

அ) "பன்மைத்துவம்" என்றால் நீர் எதைக் கருதுகின்றீர்? **(03 புள்ளிகள்)**

ஆ) "இலங்கையில் யுத்தத்தின் பின்னர் இனங்களுக்கிடையிலான மீள்நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட்டுள்ளதா? கருத்துரைக்குக. **(03 புள்ளிகள்)**

இ) உமது நண்பர் தனது கலாசாரத்தையிட்டு மிகவும் பெருமையுடையவரெனக் கொள்க. சமூகம் பற்றிய பரந்த புரிந்துணர்வை அவருக்கு நீர் எவ்வாறு விளக்குவீர்? உதாரணங்கள் தருக. **(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**Q4. பின்வருவனவற்றுள் யாதாயினும் ஐந்திற்கு (05) விளக்கக் குறிப்புரையெழுதுக.**

1. பொருளாதாரத் தாராளமயமாக்கலும் வெளிநாட்டு நேரடிமுதலீடுகளும்
2. ஊடகங்களின் பொறுப்பும் தேசிய ஒற்றுமையும்
3. உட்கட்டுமான அபிவிருத்திகளும் சூழல் மாசடைதலும்
4. பால்நிலைச் சமத்துவமும் பெண்களுக்கெதிரான வன்முறைகளும்
5. வறியோருக்கான வங்கித்தொழிலும் வறுமையொழிப்பும்
6. இலங்கைமீதான மனித உரிமைமீறற் குற்றச்சாட்டுக்களும் சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வும்

**(05×04 = மொத்தம் 20 புள்ளிகள்)**